1984 பிப்ரவரி 21]

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தில் மிகவும் நலிந்துள்ள பத்திரிக்கை ஊழியர்களுக்கு வீடுகள் ஒதுக்கித் தருவது மிகவும் அவசியம். எனவே நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றுகிற வகையிலே அவர்களுக்கு விரைவில் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு எத்தனை பேர்களுக்கு வீடுகள் வழங்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, பத்திரிக்கை துறையிலே பணியாற்றிக் கொண்டு இருக்கிற ஊழியர்கள் என்று சொல்கிற நேரத்திலே இன்றைக்கு நிருபர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்களுக்கு பல்வேறு இடங்களில் வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. திருநெல்வேலி பொறுத்தவரையில் இப்போது கட்டப்பட்டுக் கொண்டிருக்கிற வீடுகளில் அரசு ஒதுக்கீட்டில் அவர்களுக்கு முதலில் இரண்டு வீடுகள் தரலாம் என்றும், அந்த வீடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் யாருக்கு பரிந்துரை செய்கிறார்களோ அவர்களுக்கு அளிக்கலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆரம்பத்திலே இரண்டு வீடுகள் என்று சொல்லப்படுகிறது. ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கைகளுக்காவது அதிகமாக வழங்குவது தான் நியாயமாக இருக்கும். ஆகவே ஒதுக்கப்படுகிற வீடுகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற பத்திரிக்கையாளர்களின் கோரிக்கையையும், என்னுடைய கோரிக்கையையும் வைத்து, அதை பரிவோடு அரசு கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு சென்னையில் இருப்பவர்களுக்கு பிரச்னையை தீர்ப்பதற்கு என்ன என்ன ஏற்பாட்டை அரசு செய்யும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரிவோடு கேட்டு இருக்கிற காரணத்தால் பரிவோடு கவனிக்கவேண்டும் என்ற நிலையில் இருக்கிறோம். ஆனால் அவருக்குப் பரிவு நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். சென்னையிலே இருக்கிற ஊழியர்களாக இருந்தாலும் அல்லது வேறு எங்கே இருக்கும் ஊழியர்களாக இருந்தாலும் பரிவிலிருந்து கொஞ்சமும் தவறுவது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாரமங்கலம் ஒன்றியத்தில் பனைபொருள் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கும் திட்டம்.

113—(* வினா எண். 18206) திரு. செ. செம்மலை : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் ஒன்றியத்தில் பனை பொருள் பயிற்சி நிலையம் ஆரம்பிக்க எந்த இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) எத்தனை பேர்களுக்கு அந்த நிலையத்தில் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி : (அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் ஒன்றியத்தில் தொளசம்பட்டி மற்றும் ஓலைப்பட்டி ஆகிய இரண்டு இடங்களில் பனைப் பொருள் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

(ஆ) தொளசம்பட்டியில் 10 பேர்களுக்கு மூன்று மாதங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இது தவிர ஓலைப்பட்டி அரிசன காலனியில் 20 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிரைசம் மூலம் பயிற்சி அளிக்கப்பட்ட அவர்களுக்கு பயிற்சி காலம் முடிந்து விட்டது. பயிற்சி பெற்ற பெண்கள் தற்போது வேலை இல்லாமல் இருப்பதால், ஐ. ஆர். டி. பி. மூலமாக கூட்டுறவுத் துறையில் இவர்களுக்கு ஏதாவது தொழில் கூடம் அமைத்து நல்ல வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தர அமைச்சர் அவர்கள் முயற்சிப்பாரா?

மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, பயிற்சி பெற்றவர்களுக்கு தனி கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் மேய்ச்சேரி, வெள்ளாறு கிராமத்தில் பயிற்சி பெற்ற பெண்கள் உற்பத்தி செய்யும் பனைத்தும்பை சேலம் மாவட்ட கூட்டுறவு சங்கம் தொடர்ந்து கொள்முதல் செய்வதன் மூலம் அவர்களுக்கு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்ட கடற்கரையோரங்களில் மீனவர் வழிகாட்டி விளக்குகள் அமைக்கும் திட்டம்.

114—(* வினா எண். 20327) திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்ட கடற்கரையோரங்களில் எங்கெங்கு மீனவர் வழிகாட்டும் விளக்குகள் அமைக்கப்படுகின்றன?

(ஆ) வெள்ளப்பள்ளம், ஆற்காட்டுத்துறை, கோவில்பத்து, விழுந்தமாவடி ஆகிய இடங்களில் வழிகாட்டும் விளக்குகள் அமைக்கப்படுமா?